


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து, அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பாக, புதிய பேருந்துகளை இன்று (21.09.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.
அதனை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில்,
இராணிதோட்டம் பனிமனையில் புதிதாக மாவட்டத்தில் இயக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகளை பார்வையிட்டு, அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு இனிப்புகளை இன்று (21.09.2016) வழங்கினார்.
தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 657/2016 நாள்: 21.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
சென்னை தலைமை செயலகத்திலிருந்து, அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பாக,
புதிய பேருந்துகளை இன்று (21.09.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமை செயலகத்திலிருந்து, அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பாக, புதிய பேருந்துகளை இன்று (21.09.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்டம், இராணிதோட்டம் பனிமனையில் புதிதாக மாவட்டத்தில் இயக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேரூந்துகளை பார்வையிட்டு, அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு இனிப்புகளை இன்று (21.09.2016) வழங்கினார்.

இதில் நாகர்கோவிலிலிருந்து திருநெல்வேலிக்கு 3 பேரூந்துகளும், நாகர்கோவிலிருந்து குமிளிக்கு ஒரு பேரூந்தும், நாகர்கோவிலிருந்து இராமேஸ்வரத்திற்கு ஒரு பேரூந்தும், நாகர்கோவிலிருந்து திண்டுக்கல்லுக்கு ஒரு பேரூந்தும், நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரத்திற்கு இரண்டு பேரூந்துகளும், நாகர்கோவிலிருந்து திருச்சிக்கு ஒரு பேரூந்தும், நாகர்கோவிலிருந்து கொடைக்கானலுக்கு ஒரு பேரூந்தும் என 10 புதிய பேரூந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக சிறப்பு செயலாக்கப் பிரிவுக்கு ஒரு ஜீப் இன்று (21.09.2016) தலைமை செயலகத்தில் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், அரசு போக்குவரத்து கழகத்தின் பொது மேலாளர் திரு. திருவம்பலம்பிள்ளை, துணை மேலாளர் திரு. கோபாலகிருஷ்ணன், துணை மேலாளர் (இயக்கம்) திரு. ஜெரோலின், தொழில் மேலாளர் திரு. மதுகுமார், திரு. கனகராஜன், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகரன் மற்றும் அரசு போக்குவரத்து ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.